# காங்கிரசரசில் கள்ளுக்கடை!

Phone No. 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா

# மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A. MALAI MANI

( திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ் )

மலர் 1 | சென்னை (24—9—49) வெளியீடு (25—9—49) | இதழ் 46

## சீமைச்சரக்கு 6 பாட்டில்! நாட்டுச்சரக்கு 1 பாட்டில்

### மத்யமாகாண சர்க்காரின் புதிய திட்டம்

### 'மதுவிலக்கு' சென்னையில், என்ன கதி?

சீமைச்சரக்கு, ஆறுபாட்டில்! நாட்டுச்சரக்கு, ஒரு பாட்டில்! லைசென்சு கட்டணம் கட்டினால் பெறலாம்!

இவ்விதம். திட்டம் தயாராகி விட்டது-குடிகாரர்களின் நன்மைக்காக! எங்கே? போர்ச்சுகீசிய ஆட்சியில்உள்ள கோவாவிலா? அல்ல! அல்ல! காங்கிரசாட்சியில் உள்ள மத்தியமாகாணத்தில்!

பஞ்சமாபாதகம், மனிதனை மிருகமாக்குவது.

இதிலே, மிகமிக மோசமான பாதகம் பாழும் குடி

இந்தக்குடியை, நம் புண்ய பாரதமக்களுக்குப் பழக்கப்படுத்தி, அவர்களை நாசமாக்கி வருகிறார்கள் வெள்ளையர்.

கொள்ளைப்பணம் குவிகிறது, குடிமூலம் இந்தக் கொடுமை ஒழியவேண்டும்—ஒழிக்கவேண்டும்—என்று கோபாவேசமாகப் பேசுவர், கதர்ச்சட்டையினர், குடிப்பழக்கமுள்ளவனின் கண்களிலேகூட, நீர் கொப்பளிக்கும் அவர்களின் உருக்கமான பேச்சைக்கேட்டால்.

அதிகாரிகளும், ஆங்கில ஆட்சியாளர்களும், அஞ்சுவர், ஆயாச மடைவர்-தமது குரல் எடுபடாது என்ற எண்ணத்துடன், மெள்ள வாதிட்டுப் பார்ப்பர், "குடி கொடியதுதான்-குடிப்பழக்கம் ஒழிக்கப்படத்தான் வேண்டும், எனினும், அந்த வகையிலே, சர்க்கார் பெரும்பொருளை வருமானமாக ஆண்டுதோறும் பெறுகிறது-திடீரென்று, ஒரே அடியாக, அந்த வருமானத்தை இழந்துவிட நேரிட்டால், அரசாங்க வரவு செலவுத்திட்டம் ஆட்டங்கொடுத்துவிடும், பல அவசியமான செலவினங்களுக்குப்பணம் கிடைக்காமல் போய்விடும்" என்று கூறுவர். "அப்படியானால், மக்கள் குடிக்கவேண்டும்! குடிகாரர்களின் மடியைத்தடவி, பணம் பறித்துத்தான் கவர்னரும் கலெக்டரும் வாழவேண்டும். அதுதானே, உங்கள் வாதம்! வெட்கமாகஇல்லையா இதைச் சொல்ல-இதுவா, ஆட்சியின் இலட்சணம்" என்றுகதருடையினர் கண்டிப்பர்—குடிகாரர்கூடக் குதூகலமடைவர், அவ்வுரை கேட்டு.

அஞ்சிய அதிகாரிகள், ஒரு சமரசப்பேச்சு - திட்டம்-கூறுவர், பிறகு ஒரேஅடியாகக் குடியை நிறுத்த முடியாது—திருட்டுத்தனமாகக் குடிதயாரித்துக்கொள்வர்—சர்க்காருக்கும் தாங்க முடியாத நஷ்டம் ஏற்படும். ஒரே அடியாகக் குடியை ஒழித்துவிட்டால் குடியின் அளவைக் கட்டுப்படுத்தலாம்- ஒருவன் இவ்வளவுக்குமேல் குடிக்கக்கூடாது என்று திட்டம் செய்யலாம்- பணமும் பாழாகி, பணபும் பாழாகி, மனிதன் மிருகமாகும் அளவுக்குக் குடிக்கும் கொடுமையைக் குறைத்துவிடலாம்- ஓயாக் குடியர்கள். குடிவெறியர்கள், குடும்பத்தையே நாசமாக்கும் குடியர்கள், என்ற நிலையில் மக்கள் பழகாதபடி பார்த்துக்கொள்ளலாம்- இவ்வளவு அளவுக்குமேல், குடிவகை, ஒரு ஆசாமிக்குத்தரக்கூடாது. என்று சட்டமே செய்யலாம்- அதுவும், குடிகாரன் என்ற லைசென்ஸ் பெற்றவன்மட்டுமே, குடிவகையை, குறித்துள்ள அளவுக்குப் பெறலாம் என்று, சட்டம் செய்துவிடலாம்" என்று கூறினர்.

கைகொட்டிச் சிரித்தனர், காங்கிரஸ் பேச்சாளர்கள்.

நாடு, நையாண்டி செய்தது அந்தத் திட்டம் கூறினவர்களைக் கண்டு.

பாபத்தை, அளவு போடுகிறான் பார், புத்திசாலி!

விஷத்தை, அளவிட்டுக் கொடுக்கிறானும் விவேகி!—என்று கேலி பேசினர்.

குடிப்பது பாபம், தீது. சட்டவிரோதம் என்று கூற வேண்டும்

அதுவும் போதாது, குடி விற்பனை தடுக்கப்படவேண்டும.

அப்போதுதான், பாரத புத்ரர்கள் பாபப் படுகுழியில் வீழாமலிருப்பர் என்று பேசினர் காங்கிரசார்.

குடியின் கேடுகளைஎடுத்துக் கூறிப் பிரசாரம் செய்து, மக்களின் மனதை மாற்றலாமே, என்று யோசனை, கூறிப் பார்த்தனர்.

குடிவகையை ஒருபுறம் விறபனைக்குத் தயாராக வைத்துக்கொண்டு, மறுபுறம், குடிப்பது பாபம் என்று பேசுவதா! யாரை ஏமாற்றும் வித்தை இது! கண்ணிலே, மண் தூவுவதா! என்று கண்டித்தனர்.

மிதக்குடிப் பிரசாரம் (Temperary Propaganda) என்ற சர்க்கார் திட்டம், கேலியாலேயே சாகடிக்கப்பட்டது.

அந்த விதம், 'வீரம்' பேசிய காங்கிரசாரின் ஆட்சியிலே தான், இன்று, "சீமைச்சரக்கு ஒரு ஆளுக்கு ஆறு பாட்டில்! நாட்டுச் சரக்கு, ஒரு பாட்டில்!" என்று அளவிட்டு, குடியைத் தரும் திட்டம் தயாராகிவிட்டது.

இரண்டு ஆண்டுகள் குடிப் பழக்கமுள்ளவன், மசாரக இருந்தாலும், அதிகாரிக்கு மனுச்செய்தால், லைசென்சு தரப்படும். குடிப்பதற்கு லைசென்சு, காநதியார் பெயர் கூறி, முடிசூட்டிக்கொண்டவர்களின் ஆட்சியிலே.

குடிப்பது பாபம்-கொடுமை-மடமை-அன்னிய ஆட்சியின் விளைவுகளிலே ஒன்று-வேதனை தரும் விளைவு-என்று முழக்கமிட்டு பீடம ஏறியவாகள், குடியின் அளவைக் கட்டுப்படுத்திடும் திட்டம் தீட்டுகிறார்கள்.

ஒரு குடிகாரன் கூட, மற்றோர் குடிகாரனுக்குக் கூறுவதுண்டு, 'போதும்டா! தலை சாயுது! பேச்சு குளறுது! இன்னமும குடித்தால தாங்க மாட்டே" என்று.

காங்கிரசாட்சி, இப்போது, அளந்து கொடுத்துக் குடிக்கச் சொல்கிறது — கணக்கிட்டுக் கொடுக்கிறது.

பங்கீடு முறையாம், பாழும் குடிககு!

"ஏ, மானிடனே! நீ சிசுவையும் தாயையும் சேர்த்துக் கொல்லாதே-பாபம்அதிகம—எனவே என் சாபமும் அதிகமாக இருக்கும், தாயைமட்டுமாவது கொல்லு, அல்லது குழந்தையை மட்டுமாவது கொல்லு" என்று ஆண்டவன, புதுத்திட்டம்வகுத்து, பூலோகததுக்குக் கூறினால், எப்படி இருக்கும்! அது போலிருக்கிறது, இந்தப்புதுக்காங்கிரஸ் திட்டம—சீமைச் சரக்கு ஆறு பாட்டில் குடிக்கலாம்-நாட்டுச் சரக்கு ஒரு பாட்டில் குடிக்கலாம்-என்றுகுடிகாரர்களுக்கு, அளவுமுறை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

ஐம்பது ரூபாய் கட்டணம் கட்டினால், சீமைச்சரக்குச் சாப்பிட லைசென்சாம். பனிரண்டு ரூபாய் தந்தால் நாட்டுச் சரககு சாப்பிட லைசென்சாம்.

இந்தப்போக்குக்கு வந்திருக்கிறது, குடிஒழிப்பு என்ற புனிதத் திட்டம் தயாரித்த காங்கிரசாட்சி.

மிதக் குடிப்பிரசாரத் திட்டத்தைக் கண்டித்துக் கேலி செய்து கேவலப்படுத்தியவர்கள் இன்று, அதே திட்டத்தின்படி நடக்க முற்படுகிறார்கள்.

ஏன் இந்த வீழ்ச்சி! ஏன்

[தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க]

## "பாலைவனம் பயிரிடும் நிலமாகிறது"

### பஞ்சம் கண்டு அஞ்சவேண்டாம் என்கிறார் நேரு

"1951-க்குள் உணவுப் பொருள்களை வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை நிறுத்திவிடுவதென முடிவு செய்தோம். அதைவிட விரைவில் உணவு இறக்குமதியை நிறுத்திவிடுவதென முடிவு செய்திருக்கிறோம். நிறுத்திவிட முடியும் என நான் நம்புகிறேன், ஏனெனில் ராஜபுதனப் பாலைவனம் விரைவில் பயிர் விளையும் நிலமாகப்போகிறது. இந்தியா முழுவதிலும் நல்ல மகசூலும் இருக்கிறது" என்று இந்திய முதலமைச்சர் பண்டிதர் நேரு ரேடியோ மூலம் பசிப்பிணியால் வாடும் மக்களுக்கு அபயம் அளித்துள்ளார். "கழுத்தே வருந்தாதே மேலைக்குத் தாலியுடன் விளங்குவாய்" என்றாளாம் ஒருத்தி. அதுபோலவிருக்கிறது முதலமைச்சரின் அபயப் பேச்சு.

இவ்வருட மகசூல் எவ்வளவு திருப்திகரமாயிருந்தாலும் நம் நாடு பற்றாக்குறை நாடாக இருப்பதால், சுமார் 45 லட்சம் டன் அரிசி வெளிநாட்டிலிருந்துதானே தருவிக்கப்படவேண்டும். அதையும் நிறுத்திவிட்டால், வள்ளிக்கிழங்கிடமும வாழைப்பழத்திடமும் சரணாகதி அடைவது தவிர வேறு வழி ஏது? அல்லது பாலைவனப் பயிர் அறுவடையாகும் காலம்வரை மக்கள் தண்ணீர் அருந்தி உண்ணாவிரதமிருந்து காத்திருக்கவேண்டியதுதான்.

உண்மையிலேயே நம் நாட்டில் மக்கள் நிலையில் அரசாங்கத்துக்கு அக்கறையிருக்கிறதென்றால், நம் நாட்டைப் பற்றாக்குறை நாடு என்ற குறையிலிருந்து தப்புவித்து நம் நாட்டில் விளைபவை நம் நாட்டு மககளுக்குப் போதுமானவை என்ற திட்டமான நிலைமை ஏற்படும் வரை உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதை நிறுத்தக் கூடாது. தன்னைச் சரிகட்டிக் கொண்டுபோகக்கூடிய நிலைமை ஏற்பட்டுவிட்டபின், உடனே உணவுப் பொருள் இறக்குமதியை நிறுத்திவிடலாம்.

ஆனால், இதை ஆட்சிப்பீடத்தில் அமர்ந்துள்ளவர்கள் கவனிக்கவில்லையே! ஆட்சிப் பீடத்தாரின் இப்போக்கு, மக்களுக்குநலன் செய்யக்கூடியதாய் இருக்கமுடியுமா? அவசரப்பட்டு உணவுப் பொருள்கள் இறக்குமதியைத் தடுத்துவிடுவதால், மக்களின் பசிப்பிணியை அகற்றிவிட முடியுமா? "பலருடைய சங்கடங்களைப் பயன்படுத்தி ஒரு சில வர்த்தகர் லாபமடைவது துரோகம்; அப்படிப்பட்டவர்கள் தேச நலனை அவமதிப்பவர்கள். இவர்கள் பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்" என்று பேசிவிட்டால் போதுமா? இதுவரை ரேஷனுக்குள்ளானவை தவிர உணவுப் பொருள்களைக் கொள்ளை லாபத்திற்கு விற்றவர்களை அரசாங்கம் என்ன செய்துவிட்டது? எனவே, வர்த்தகர்கள் கதராணிந்து, காந்திக்குல்லாயணிந்து தேசியக்கொடி பறக்க விட்டு, கொள்ளை இலாபம் அடித்துக் கொண்டிருப்பவர்கள் பலருளரே! காங்கிரஸ்காரர்களே பலர் இத்திருப்பணிக்குரியவர்களாயிருக்கின்றனரே! இவர்கள் கண்டு பிடிக்கப்பட்டுத் தண்டிக்கப் பட்டனரா? செல்வாக்கு குறுக்கிடுகிறதோ? தேசபக்தி-தியாக லேபிள்கள் தடுக்கின்றனவோ?

மககள் அங்கவில்லை தாக்கூடாது, பொது மக்கள் உழைப்பு மூலம் தான் இத்துரோக நடவடிக்கைகளைத் தடுக்க முடியும் என்கிறார் பண்டிதர் நேரு.

அதிக விலையாக விற்பதை ஏழைகள் வாங்கவே மாட்டார்கள், பணக்காரர்கள் எவ்வளவு அதிகமாயினும் வாஙகுவார்கள். ஏழைகளை வஞ்சித்துப் பணக்காரர்களைக்கொள்ளையடிக்க வர்த்தகர்கள், பதுக்கிக் கள்ளமார்க்கெட்டில் கொள்ளை லாப மடிப்பது இந்நாட்டில் வழக்கமாகி விட்டது.

ஏழை மக்கள் கள்ளமார்க்கெட்காரர்களைக் காட்டிக் கொடுக்கமுன் வந்தாலும், வர்த்தகர்களின் செல்வாக்கிற்கு முன் இவ்வேழைகளின் ஜம்பம் பலிப்பதில்லை.

இந்நிலையில் ஏழைகள் பஞ்சம் கண்டு அஞ்சாமல் இருக்க முடியுமா? பாலைவனப் பயிரை எதிர்பார்த்துக் கொண்டு உயிரைக்கையில் பிடித்துக்கொண்டிருக்க முடியுமா?

### படப்பிடிப்பு!

"மாகாணத்தின் அன்றாட நிர்வாகத்தில் காங்கிரஸ்காரர்கள் தலையிடக் கூடாது. குறைகள் இருந்தால் காங்கிரஸ் மேலிடத்தின் பரிசிலனைககு விடவேண்டும்."

—ஜவஹர்.

# மாலை மணி

சென்னை 24—9—49 சனிக்கிழமை

## ஆக்க வேலை :: தொடங்குவோம்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தோற்றங்கண்டு, மனமகிழ்ச்சியுற்று, பெருமிதங் காட்டி, ஆதரவு தந்து, அன்பர்கள் பலரும் விடும் அஞ்சல்கள், வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன. கழகத்தோழர்களிடையே பதுங்கிக் கிடந்த ஆவல், எத்தகைய சிறப்பு வாய்ந்த வரவேற்பைத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நல்குகிறது என்பதை, அவ்வஞ்சல்கள் எடுத்துக் காட்டுகின்றன. உண்மைக்கு-உழைப்புக்கு-நீதிக்கு-நேர்மைக்குக் கழகத்தோழர்கள் அளிக்கும் மதிப்பு உள்ளபடியே நமக்கு மிகக மகிழ்ச்சியை ஊட்டுகிறது!

கொள்கைப் பற்றுடையோர்க்கு, பணிபுரியும் பண்புடையோர்க்கு, நீதி காணும் நோமையாளர்க்கு ஏற்ற இடம்-தகுதியான இடம்-திராவிட முன்னேற்றக் கழகம்; அது உருவாகி விட்டது! இனிச் செய்ய வேண்டிய செயல்கள் ஆக்க வேலைகள் தாம்.

சென்னையில் துவக்க விழா சிறப்புற நடந்தேறி விட்டது. இனி வெளியூர்களில் துவக்க விழாக்கள் நடைபெறவேண்டியிருக்கின்றன. அக்டோபர் திங்கள் 16ம் நாளை, வெளியூர்களில் துவக்கவிழா கொண்டாடுவதற்கான நாளாகத் தெரிந்தெடுத்துள்ளனர் அமைப்புக் குழுவினர். அக்டோபர் 16ம் நாளையும், அதனைத் தொடர்ந்த ஒருவார காலத்தையும், துவக்க விழா நாட்களாகக் கொண்டு, ஆங்காங்குத் துவக்க விழாக்கள் கொண்டாடக் கழகத் தோழர்கள் முனைய வேண்டும்.

துவக்க விழா நடத்துவதற்கு முன்பு, கிளைக் கழக அமைப்புகள் ஆங்காங்கு அமைத்துவிட வேண்டியது அவசியமாகும்.

உறுப்பினர்கள் சேர்க்கையிலே, நமது தோழர்கள் மிகவும் கவனமும், அக்கரையும் செலுத்தவேண்டியது, இன்றியமையாத கடமைகளுள் ஒன்றாகும். உறுப்பினர்கள் பட்டியல்தான் கழகத்தின் சொத்து! அந்தப்பட்டியலிலிருந்துதான், எதிர் காலத்தில், கழகம், வலிபெற்று வளர்ந்து நிற்கவேண்டியிருக்கிறது. உறுப்பினர்களைக் கொண்டுதான், நகர—சிற்றூர்—பேரூர் கிளைக் கழகங்களும், மாவட்டக் கழகங்களும், மத்திய தலைமைக் கழகமும் உருவாக வேண்டியிருக்கின்றன. எனவேதான், உறுப்பினர்கள் புதிதாகத் தோன்றியுள்ள நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படையாவார்கள் என்று கூறுகிறோம்.

கழகத் தோழர்கள், கழகத்தில் உரிமை கொண்டாடுவதற்கு, ஒரே ஆதாரமாக இருப்பது, உறுப்பினர் உரிமைச்சீட்டு (சந்தா ரசீது) தான். ஆகவேதான், கழகப் பற்றுடைய தோழர்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்து கொள்ள வேண்டியதிலுள்ள அவசியத்தையும், பதிவு பெறாத தோழர்களைக் கழக உறுப்பினராகப் பதிவு செய்து வைக்க வேண்டியதிலுள்ள அவசியத்தையும் இங்கு வற்புறுத்துகிறோம்.

உறுப்பினர் உரிமைச்சீட்டுப் புத்தகங்கள் (சந்தா ரசீது) விரைவில் தலைமைக் கழக நிலையத்தாரால் ஆங்காங்கு அனுப்பிவைக்கப்படும். அவற்றைப் பெற்றுக் கொண்டு, உறுப்பினர் சேர்க்கும் வேலையில் உடனடியாக இறங்கும்படியாகக் கழகத்தின் முன்னணித் தொண்டர்கள் யாவரையும் கேட்டுக்கொள்கிறோம். துவக்க விழா ஆற்றப்படுவதற்கு முன் உறுப்பினர் சேர்த்தலும், கழகம் அமைத்தலும் ஓரளவுக்காவது நிறைவேறி விடவேண்டும் என்பதை மீண்டும், மீண்டும், வற்புறுத்த விரும்புகிறோம்.

கழகத்தின் தற்காலிகக் கொடியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் கறுப்பும் சிவப்பும், முறையே மேலும் கீழுமாக அமைந்த அக்கொடியை நாடெங்கும் ஏற்றிவைக்கவும் கழகத் தோழர்கள் முற்பட வேண்டும். இப்பொழுதே பல ஊர்களில் முன்னேற்றக் கழகக் கொடியை ஏற்றி வைக்கும் விழா நடைபெற்றிருப்பதைக் காண மகிழ்வுறுகிறோம்.

ஆக்க வேலைகளைத் தொடர்ந்து புரிவதற்கான அடிப்படை—அவசிய-வேலையாகக் கருதப்படும் கழக அமைப்பு வேலையை, நாடு நகரங்கள், பட்டி தொட்டிகளிலெல்லாம் உடனடியாக மேற்கொள்ளும்படியாக வற்புறுத்துகிறோம், செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடையாளமாக, இரு வண்ணங்கள் திட்டப்பட்ட கொடி இருக்கிறது. அதுவே போதும். அதையே 'பாட்ஜ்' ஆகக்கொள்ளலாம். உடையிலே தனி அடையாளங் காட்டவேண்டிய அவசியமில்லை; தேவையில்லை; தேவைப்படும்போது, அதற்கான திட்டம் தீட்டிக்கொள்ளலாம். அவரவர் விருப்பப்படி, அவரவர் வசதிப்படி, ஏற்ற உடையைக்கொள்ளலாம், இதைத்தான் கொள்ள வேண்டுமென்றோ, இதைக் கொள்ளக்கூடாது என்றோ கட்டாயம் எதுவும் தற்பொழுது வற்புறுத்தப்படவில்லை. உடையிலே எந்த வண்ண உடையையும்கொள்ளலாம்.

**ஆக்கவேலை தொடங்குவோம்!**
**கழக அமைப்புக் காண்போம்!**

## வறுமை நீங்க வழியில்லையா?

'வறுமையும், அறியாமையும், வேலையில்லாத் திண்டாட்டமுமே இன்று நம் முக்கிய வைரிகளாயிருக்கின்றன. அவற்றை நாம்முறியடித்தேயாக வேண்டும்.'

என்கிறார் பண்டித நேரு அம்பாலாவில கிழ்ப்பஞ்சாப வாசிகளுக்கு ஆற்றிய சொற்பொழிவில.

இப் பரம வைரிகளை முறியடிக்க இன்றுவரை நேரு அரசாங்கம் வகுத்த திட்டமென்ன? இவற்றை உடனடியாக முறியடிக்க முடியாதா? இவற்றை உடனே ஒழித்துக்கட்டும் திட்டமிட அரசாங்கத்துக்குத் தெரியவில்லை யெனின், அறிஞர்களைக் கூட்டி ஆவன செய்ய வேணும் முயற்சிக்கப்பட்டதா? நாட்டில் பல கைத்தொழிற்சாலைகள், கல்வி நிலையங்கள் ஏற்படுத்துவதன் மூலம் இவற்றை முறியடிக்க முடியாதா? முடியும். ஆனால் அரசாங்கத்தின் கவனம் இப்போது வேறு "முக்கிய" விஷயங்களில் திரும்பியிருக்கிறதே! இவற்றைக் கவனிக்க இப்போது அவகாசமுண்டா?

"ஜப்பானில் வர்த்தகத் தொழில் மறு மலர்ச்சியடைந்து விட்டது. ஜப்பான் ஆசியாக் கண்டத்துக்கே தொழில்தலைமை பூணும் நிலைமைக்கு வர முயல்கிறது. ஜப்பானைப் பார்த்தாவது நாம் தக்க பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்" என்று சேலத்தில் சர். சி. பி பேசியுள்ளார்

வறுமையையும் வேலையில்லாத்திண்டாட்டத்தையும் முறியடிக்க ஆசைப்படும் பண்டித நேரு, ஜப்பான் நாட்டில் தொழிலை வளர்க்கும் முறையைக் கண்டறிந்து வந்து, உடனடியாக அதை நம் நாட்டில் பரப்பினால் இந்நாடு தொழில் துறையில் முன்னேறி, வறுமை நீங்கி, வேலையில்லாத் திண்டாட்டம் அகன்று வாழுமன்றோ! கவனிப்பாரா முதலமைச்சர்?

## நம் நாடு நலனடைய

"சட்டபூர்வமான ஆட்சியில் ஆங்கிலேயருக்குள்ள மதிப்பும், சுதந்திரத்தின் மீது அமெரிக்கருக்குள்ள ஆர்வமும், மக்களிடைச் சமத்துவம் சகோதரத்துவம், ஒற்றுமை, ஒரே சமுதாய மனப்பான்மை முதலியவற்றில் ரஷியருக்குள்ள அசைக்க முடியாத நம்பிக்கையும், செயல் முறையும் நம் நாட்டில் பரவினால் நாம் உடனடியாக மேனிலை அடைவோம்" என்கிறார் திரு. எஸ். ராதாகிருஷ்ணன் பாரிஸில் நடந்த யுனஸ்கோ மாநாட்டில்.

நம் நாட்டுப் பெருந்தலைவர்கள் இந்த நல்ல ஆலோசனையை மேற்கொண்டு, இதற்கேற்ப நாட்டுச்சமுதாய நிலையை மாற்றியமைக்க முன் வருவார்களா? இந்த 3 நாடுகளின் அரும் பெரும் தத்துவங்கள் நம் நாட்டில் அழுத்தமாகப் பரவி விடாமல் தடையாக இருக்கும் முட்டுக்கட்டைகளை அகற்ற முன் வருவார்களா?

## மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துக

மாதர் நலப்பாதுகாப்புஇயக்கத்தினர் சென்னை ராஜாஜி ஹாலில் கூடியபோது, சென்னை முதலமைச்சர் அவர்களிடையே, மாதர் தம உயர்வு குறித்துப்பேசினர்.

"சமுதாய நிலை, பழக்கவழக்கங்கள், நடைமுறை ஆகியவை, ஆண்களுக்கு நிகராக மாதர்கள் முன்வரவோ, கல்விபெறவோ, தங்களுடைய திறமைகளை வெளிப்படுத்தவோ இயலாமற் போகுமாறு செய்துவைத்திருக்கின்றன. இப்போதுங்கூட மாதர்கள் பொருளாதாரம், சமுதாய இயல், ஊர் நிலை, கல்வித்துறை முதலியவற்றில் மிகவும் பிற்போக்கான அறிவுடையவர்களாகக் காணப்படுவதும, மாதர்களிடையே போதிய அளவு கல்வி பரவாதிருப்பதும் மிகவும் வருந்தக் கூடியதாகும்" என்று கூறினர் சென்னை முதலமைச்சர்.

நம் நாட்டு மாதர்கள் பழங்காலத்தில் பெரும்புலவர்களாக, அரசியல் ஞானிகளாக, நாட்டு முன்னேற்றத்தில் பெரும் அக்கறை உடையவர்களாக, வீரவனிதையாக விளங்கினார்கள் என்று படிக்கிறோம். ஆனால் இன்றையதினம் நம்நாட்டு மாதர் நிலை முதலமைச்சர் விளக்கியவாறு சீரழிந்து கிடப்பதற்குக் காரணமென்ன?

சீரழிந்து கிடக்கிறது என்பது அனைவரும் அறிந்திருக்கும் உண்மை. ஆனால் அந்நிலைபோக்கி, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழச்செய்யத் தடையாயிருப்பவை எவை எனக் கண்டுபிடித்து, அத்தடைகளை வேருடன்களைந்து அவர்களுடைய முன்னேற்றத்துக்கு வேலைசெய்ய வேண்டியது அரசாங்க ஆட்சிப்பொறுப்பேற்றுத் தலைமைபீடத்தில் அமர்ந்திருக்கும் முதலமைச்சருடைய கடமையல்லவா?

'மாதர் கல்வி கற்பது கூடாது, பாபம், பெண்கள் மாயைகள், வீடுபேறடைவதற்குத் தடைகள், பெண்களா[illegible]ப்பிறப்பதே முன் ஜென்மப் பாபத்தின் பலன், பெண்ணாய்ப் பிறந்தவள் அடிமையாக வேண்டும், தனக்கென உரிமைபேசக்கூடாது" என்றெல்லாம் இந்த நாட்டில் பரப்பப்பட்ட தத்துவங்களை நாட்டை விட்டகற்ற முதலமைச்சர் முயற்சித்ததுண்டா? இத்தகைய இழிந்த பிற்போக்கான தத்துவத்தை நம் நாட்டில் பரப்பிவைத்த வர்ணாசிரம-சனாதன தர்மத்தைக் கண்டித்தொழித்து, 'மாதர்தம்மை இழிவுசெய்யும் மடமையைக் கொளுத்துவோம்" எனனும் பாரதி வாக்கைப்பின்பற்றி, மாதரைப்பழித்துத் தொகுக்கிய தத்துவங்களைப் பொசுக்குவதே அவர்களை முன்னேற்றப்பாதையில் கொண்டுவர உண்மையான பணிசெய்ததாகும். அதைவிட்டு, எத்தனை மேடைகளில் ஏறி, மாதர் முன்னேற வேண்டும், கல்வி கற்க வேண்டும், அரசியல் சமுதாய இயல்களை அறிதல் வேண்டுமென்று பேசித்தீர்த்தாலும் பயன்விளையாது. மாதர் நிலையைத் தாழ்த்திவைக்கும் தத்துவங்கள் பொசுக்கப்பட்டால், சமுதாயத்தில் அவர்களின் அந்தஸ்து உயர்ந்து, ஒரு தலைமுறைக்காலத்தில் அவர்கள் உயர்ந்த நிலையை அடைந்துவிடுவார்கள். மாதர் முன்னேற்றங்கருதும் முதலமைச்சர் இதைச்செய்ய முன்வருவாரா?

## காங்கிரஸ்: பாமர மக்களைக் காக்க முடியாது

"பாமர மக்களைப் பாதுகாத்து, முன்னேற்றம் அடையச் செய்வது காங்கிரஸ் ஒன்றே தான் என்ற கூற்று இப்போது பொய்த்து விட்டது. இனிமேல காங்கிரஸ் அவ்வாறு கூறிக் கொள்ள முடியாது. எனவே, அடுத்த சில ஆண்டுகளில் நான் தொழிலாளர் அரசு ஏற்படுத்த முடிவு செய்து விட்டேன்." என்று சோஷலிசக் கட்சிப் பொதுக்காரியதரிசி திரு. ஜெயப்பிரகாசர் பம்பாயில் தெரிவித்தார். இவர் ஏற்படுத்தவிருக்கும் தொழிலாளர் அரசாவது பாமர மக்களின் உரிமைகளைக்காக்கும் நல்ல திட்டத்துடனிருக்க வேண்டுமே! ஒரு சிலர் முன்னேறத் தொழிலாளர்களைப் பயன்படுத்தும் முறையைவிட்டு இவர்கட்சி தப்புமா?

## முதல் அமைச்சரின் பேச்சு வர்த்தகரிடம் பலிக்குமா?

"ரூபாய் மதிப்புக் குறைவால் இந்திய மக்களுடைய வாழ்க்கைச் செலவு ஏறும் என அஞ்ச வேண்டாம். விலைவாசிகள் குறையா என்று எண்ணுவது ஆதாரமற்றது." என்று இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு புதுடில்லியிலிருந்து தெரிவிக்கிறார்.

ஆனால் முதலமைச்சர் பேசுவதற்கோ, அவருடைய வேண்டுகோளுக்கோ, செவிமடுப்பவர் எவருளர்? பம்பாய் வர்த்தகர்கள் முதலமைச்சரின் எந்தப் பேச்சுக்கும் செவிசாய்க்காமல், இன்றியமையாது தேவைப்படும் மருந்தினங்களின் விலைகளை 50 சதவிகிதம் கூட்டி உயர்த்திவிட்டனர். மற்றச் சாமான்களின் விலைவாசிகளும் உயர்ந்து விட்டன.

சென்னையில், சில வியாபாரிகள் அமெரிக்கச் சாமான்கள் மட்டுமின்றி, பிரிட்டன், ஆஸ்ட்ரேலியா முதலியவிடங்களிலிருந்து முன்னரே வந்துள்ள சாமான்களின் விலைகளைக்கூட மனம் போலக் கூட்டி விற்கின்றார்கள்.

முதலமைச்சர் வாழ்க்கைச் செலவு ஏறாது, விலை வாசிகள் குறையும் என்று ரேடியோவில் பேசுகிறார். இங்கு நடைபெறுவது அதற்கு நேர் விரோதமான செயல.

கொள்ளை லாபம் பெறும் ஆசை பலிக்காதென்று பேசுகிறார் பண்டிதர் நேரு ரேடியோவில்.

கடைக் காரர்களோ [illegible] மேல் பலித்து விட்டது என்று எண்ணிக் கொண்டு கொள்ளை லாபம் அடிக்கின்றனர். பேசிப் பேசிப் பாமர மக்களை மயக்கும் வித்தையில் தேர்ந்த காங்கிரஸ் ஆட்சிப் பீடம் இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்தது? சென்னைக் கடைத் தெருக்களை அரசாங்கம் ஒரு முறையாவது, பார்வையிட்டு, வர்த்தகர்கள் ஆசையும், மனப்பான்மையும் எப்படி யிருக்கிறதென்பதை அறிந்தனரா? அறிந்து தக்க நடவடிக்கை எடுக்க முனைந்தனரா!

# வரவு குறைகிறது செலவு வளர்கிறது

## செலவைச் சரிக்கட்ட சென்னைத் தியாகிகள் முன் வருவரா?

(o)

## அமைச்சர், சட்டசபை அங்கத்தினர் ஊதியங்கள் நிறுத்தப்பட வேண்டும்

வரவு குறைய, செலவு மிகுதியாகச் செய்பவன், வாழ்க்கையை வளம்பட நடத்த முடியாது; மானம் அழிந்து, மதி கெட்டு, எல்லார்க்கும் கள்ளனாய், நல்லார்க்கும் பொல்லனாய் ஆகி விடுவான்.

ஒரு தனி மனிதனாயினும், வாணிக நிலையமாயினும், அரசாங்கமே யாயினும், வரவு குறையும் நிலையில் அதிகம் செலவு செய்யத் தொடங்கினால், மான மழியும் நிலைக்கு வரத்தான் வேண்டும்.

தனி மனிதன் மிகுதியாகச் செலவு செய்தால், கடன்களை வாங்கி ஈடு செய்து, பின்னர் அதுவும் முடியாமல் வாழ்க்கையிலிருந்து வீழ்ந்து தகாத செயல்களில் ஈடுபட்டு, அல்லது கடன் கொடுத்தவர்களுடைய தொந்தரவுக்காளாகிச் சிறையையோ, அல்லது வாழ்வையே முடித்துக்கொள்வதையோ நண்ணுகிறான்.

வாணிக நிலையங்கள் அதிகச் செலவுக்குள்ளானால் முறிந்து விடுகின்றன.

தனி மனிதன் நிலை, வாணிக நிலையங்கள் நிலை இவ்வாறாவதால், பொது மக்கள் பாதிக்கப் படுவதில்லை.

அரசாங்கம் வரவு குறையும் நிலையில் அதிகச் செலவு செய்யத் தொடங்கினால், அப்போதுநிலைமை அடியோடு வேறாகிறது. வரவு குறைகிறது; செய்யும் செலவு வளர்கிறது. இதற்காக மக்கள் தலைமீது ஒன்றன் பின்னொன்றாகப் பல வரிகளைச் சுமத்தி, பொது மக்களிடமிருந்து வரிகளை வசூலித்துத்தான் செலவைச் சரிக்கட்டிக் கொள்ளும். எனவே, அதிகச் செலவுக்காளாகும் அரசாங்கத்தினால், அந்த நாட்டுப் பொது மக்கள் பெருந் தொல்லைக்காளாக வேண்டியவர்களாயிருக்கின்றனர்.

சென்னை அரசாங்கத்தின் வருமானம் 1949 ஏப்ரல் 6-ஆம் தேதி முதல் ஜூன் முடியவுள்ள மூன்று மாதத்திற்கு 9 கோடியே 75 லட்சத்து 63 ஆயிரம் ரூபாயாகும்.

கடந்த ஆண்டு இதே கால அளவில் கிடைத்த வருமானம் 10 கோடியே 78 லட்சம் ரூபாயாகும்.

கடந்த ஆண்டைவிட இந்த மூன்றுமாதத்துக் குரிய வருமானத்தில் 1,02,37,000 ரூபாய்குறைந்து விட்டது.

1949 ஏப்ரல் 6-ந் தேதி முதல் ஜூன் முடிய உள்ள செலவு 9 கோடியே 63 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய்.

கடந்த ஆண்டு இதே கால அளவு செய்யப்பட்ட செலவு 8 கோடியே 77 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய். கடந்த ஆண்டைவிட, இவ்வாண்டின் இம்மூன்றுமாத காலத்தில் 85 லட்சத்து 88 ஆயிரம் ரூபாய் அதிகமாகச் செலவாயிருக்கிறது.

அதாவது கடந்த ஆண்டு கிடைத்த வருமானம் குறைவு. ஆனால் கடந்த ஆண்டு ஏற்பட்ட செலவைவிட, இந்த ஆண்டு ஏற்பட்டிருக்கும் செலவு அதிகம். வருமானம் குறைகிறது; செலவு ஏறிக்கொண்டு போகிறது.

இப்படிப்பட்ட நிலை வளர்ந்தால், பொதுமக்கள் தொல்லைப்பட வேண்டியதுதான். இதுவரை மக்கள்மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் தாங்கமுடியாதவை.

ஆனால், செலவைக்குறைக்க வழியில்லாமற் போகவில்லை. அதைச் செய்ய ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்களுக்குமனம்வரவேண்டும்.

அமைச்சர்கள், தலைக்கு 500 ரூபாய்க்கு மேல் அரசாங்கத்திலிருந்து பணம் பெறுவதில்லை என முடிவுகட்ட வேண்டும். சுற்றுப் பிரயாணச் செலவுக்குரிய அலவன்ஸ் எனும் பெயரால் வாங்கும் பணத்தையும் விட்டுவிடவேண்டும். தேர்தல்காலங்களில் தேசபக்தியின் பெயரைக்கூறிக்கொண்டு ஊர்ஊராகச்சுற்றி ஓட்டுகேட்கும் தொண்டைச் செய்யவில்லையா? அதுபோலவே, நாட்டில் வருமானக் குறைவு ஏற்படுகிறதென்றால், இந்தத்தேசபக்தர்கள் சம்பளத்தின் பெயராலும், சுற்றுப்பிரயாண அலவன்ஸ் பெயராலும் பொதுமக்கள் பணத்தை ஏராளமாகப் பெற்றுக் கொண்டிருப்பானேன்? இவர்கள் தேசத்தின் நன்மைக்காகத் தங்கள் சொந்தச்செலவில் சுற்றுப்பிரயாணம் செய்யலாம.

அமைச்சர்கள் இவ்வண்ணம் செய்யத்துணிந்தால், இவர்கள் வரையில் மட்டும, லட்சக்கணக்கில் அரசாங்கத்திற்குச் செலவு குறையும்.

இதுமட்டுமா? சட்டசபை அங்கத்தினர்கள் மாதா மாதம் பெறும் சம்பளம், சுற்றுப்பிரயாண அலவன்ஸ் முதலியவையும் குறைக்கப் படவேண்டும். சட்டசபையைச் சில தேசபக்தர்கள் ஓய்வுமடமாகக் கருதித் தூங்குவதற்குப்பயன் படுத்திக் கொள்ளும அளவுக்கு நிலைமை இழிந்துவிட்டதென்பது அனைவரும அறிந்துள்ள உண்மை.

இவ்வாறு உறங்கியும், தேவைப் படும சமயத்தில் விழித்து கை தூக்கியும், காலங்கழிக்கும் தேசபக்தர்களையும் கொண்டதாக ஆகிவிட்ட சட்டசபையின் செலவோ அதிகமாக இருக்கிறது.

எனவே, சட்டசபை அங்கத்தினர்களும் தேசபக்தி என்னும் தீக்குண்டத்தில் பாய்ந்து பரிசுத்த தியாகிகளாய் வந்தமர்ந்துள்ளவர்களாகையால், அவர்களுடைய சம்பளங்கள், சுற்றுப்பிரயாண அலவன்ஸ்கள் முதலியவற்றையும் நிறுத்தி, ரத்து செய்து விட்டால், நாட்டிற்கு லட்சக்கணக்கான ரூபாய் மீதியாகும்.

மந்திரிகள்சம்பளம் குறைவதோ, சட்டசபை உறுப்பினர்கள் சம்பளம் போவதோ, அலவன்ஸ்கள் நிறுத்தப்படுவதோ, அவர்களுக்குத் துன்பமாகவோ, சங்கடமாகவோ இருக்க முடியாது. ஒவ்வொரு மந்திரியும், சட்டசபை உறுப்பினரும தியாகப் பிழம்புகளாக உள்ளவர்கள். தேசபக்தி- தியாகம் இவை இரண்டு வார்த்தைகளைத் தவிர வேறு ஒன்றும் அறியாதவர்கள்.

இன்றுகூட, இவர்களுடைய முன் வாழ்வு, இப்போதைய வாழ்வு இரண்டையும் சீர்தூக்கிப் பார்க்கும் எவரும், இவர்களுடைய "தியாக அறிவையும் தேசபக்தியை"யும் கண்டு வியக்காமலிருக்க மாட்டார்கள்.

இப்படிப்பட்ட தியாகக் குன்றுகள், நாட்டின் நலனுக்காக, நாட்டில் செய்யப்படவேண்டிய பல அபிவிருத்தித் திட்டங்களுக்காக, ஏழைமக்கள் உயர்வுக்காக, கல்வி வளர்ச்சிக்காக, தரிசு நிலங்களைப் பயன்படுத்தி வளப்படுத்துவதற்காக, தங்கள் சம்பளங்களையும் அலவன்சுகளையும் விட்டுக்கொடுக்கத் தயங்கமாட்டார்கள்.

எனவே, தமிழ்நாட்டுக் காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜர் முன்வந்து, இந்த மந்திரிகள், சட்டசபை உறுப்பினர்கள் அனைவர்களையும் தியாகிகளாக ஆக்கிவைக்கும பணியைச் செய்து, தங்கள் தேசபக்தியையும், தியாகத்தையும் வெளிப்படுத்தக் கோருகிறோம.

வரவு குறைய, செலவு அதிகமாக ஏற்படும் அரசாங்க நிலையைச் சரிசெய்ய இந்தத்தியாகம் தேவை. மனம் வருமா தேச பக்தர்களுக்கு!

---

### பதவியும் பட்டமும்

"உத்தியோகம் பெறுவதற்காகவோ அல்லது நிறையவரதட்சணை வாங்க வேண்டுமென்பதற்காகவோ படிக்காதீர்கள். சர்க்கார் உத்தியோகங்களுக்கும், பட்டங்களுக்கும எவ்விதச் சம்பந்தமும் இருக்கக் கூடாது."

—ஜவஹர்.

---

## இனி நடப்பவை

சென்னை திருவல்லிக்கேணி—"திருவல்லிக்கேணி திராவிட முன்னேற்றக் கழகம்" என்பதாக ஒன்று அமைக்க இருப்பதால் இந்த வட்டத்திலுள்ள தோழர்களில் உறுப்பினராகச் சேரவும், கழகம் அமைக்கவும் விருப்பமுடையத் தோழர்கள், 301, திருவல்லிக்கேணி ஹைரோடில் 25-9-49 ஞாயிறன்று காலை 9-மணிக்கு வந்து கூடுமாறு வேண்டப்படுகிறார்கள்.

*　*　*

காஞ்சிபுரம்—இவ்வூர் திராவிட மறுமலர்ச்சிக் கழக நிர்வாக உறுப்பினர் கூட்டம் 25-9-49 ஞாயிறு மாலை 4-மணிக்கு கழகக்கட்டிடத்தில் நடைபெறும். அவ்வமயம் கழகத்தின் பெயரைப் புதுப்பிக்கவும், 16-10-49ல் திராவிட முன்னேற்றக் கழகத்துவக்க விழா நடத்தவும் தீர்மானிக்கப்படும். கழக உறுப்பினர்கள் இதையே அழைப்பாகக் கொண்டு வருகைதர வேண்டப்படுகிறார்கள.

*　*　*

தஞ்சை-25-9-49 ஞாயிறு காலை 9-மணிக்கு தஞ்சை திராவிட முன்னேற்றக்கழக அமைப்புக் கூட்டம், தஞ்சை கீழவாசல் தோழர் எஸ். பெத்தண்ணன் அவர்கள அலுமினிய பாக்டரியில் நடைபெறும. தி. மு. கழக வளர்ச்சியில் கருத்துடைய அனைவரும் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகிறார்கள.

*　*　*

காரை— இராணிப் பேட்டைக் கடுத்த காரை மறுமலர்ச்சிக் கழகத்தில், வேலூர் தோழர் அழகுமலைச் செம்மன்னர் தலைமையில் திருக்குறள் சொற்பொழிவு நடைபெறும. தோழர்கள்:-வித்வான மணி எழிலன், ஓம். எழிலன் ஆகியோர் பேசுவர.

*　*　*

வேலூர்—தபால் தந்தி இலாகா இரண்டாவது மாநாடு வேலூர் மகந்து உயர்நிலைப் பள்ளியில் 25-9-49 மாலை நடைபெறும. அகில இந்திய இரயில்வே சம்மேளன பொதுக்காரியதரிசி, தோழர் எஸ். குருசாமி தலைமைவகிப்பார்.

---

### "லெனின் மாலை மணி" தோற்றம்

இடையன்குளம் செப். 22—

இவ்வூர் தோழர் கிராண்டுகேரும், தோழியர் சு. எஸ்தருக்கும் பிறந்த மகவுக்கு "லெனின் மாலை மணி" எனப் பெயரிடப்பட்டது. இம் மகவு "மாலை மணி" வெளியான நாளாகிய 11-8-49 ல் பிறந்ததால் இப்பெயரிடப்பட்டது. இதன் நினைவாக ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். மகிழ்ச்சி!

---

# கழக அறிவிப்பு

கீழ்க்கண்டவர்கள் கீழ்க்கண்டபடி, குழுக்களின உறுப்பினர்களாகப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

### பொதுக்குழு

| | | |
|---|---|---|
| ஏ. கோவிந்தசாமி | — | பொன்மலை |
| எம். எஸ். மணி | — | திருச்சி |
| ம. கி. சோமசுந்தரம் | — | மனக்கால் |
| எல். என். பரமசிவம் | — | லால்குடி |
| பி. எம். நாராயணசாமி | — | பொருவளசல்லூர் |
| டி. நடராசன | — | புதூர் |
| வி. சீனிவாசன் | — | சீரங்கம் |
| எஸ். எஸ். மணி | — | தஞ்சை |
| வி. நாராயணசாமி | — | மன்னார்குடி |
| ஈ. தங்கவேலர் | — | வந்தவாசி |
| பி. கே. என். சக்கரவர்த்தி | — | தேரூர் |
| சே. தேவசகாயம | — | சென்னை |
| டி. சீனிவாசன் | — | கோவை |
| வெங்கடாசலம் | — | உடுமலை |
| வி. சி. கோபால் | — | கோவை |
| எஸ். ஆர். சந்தானம் | — | ஈரோடு |
| ஏ. சங்கரய்யா | — | ஈரோடு |
| டாக்டர் எஸ். சிவசங்கரன் | — | முத்துப்பேட்டை |
| ரா. சௌரி ராஜன் | — | பட்டுக்கோட்டை |
| இரா. இளவரி | — | பட்டுக்கோட்டை |
| எம். எஸ். ராமசாமி | — | அருப்புக்கோட்டை |
| ஏ. கே. வேலன் | — | தஞ்சை |
| த. மா. திருநாவுக்கரசு | — | அண்ணாமலைநகர் |
| ஆர். அங்கமுத்து | — | சென்னை |

### பிரசாரக் குழு

| | | |
|---|---|---|
| சி. டி. டி. அரசு | — | சென்னை |
| எஸ். எஸ். மணி | — | தஞ்சை |
| இரா. இளவரி | — | பட்டுக்கோட்டை |
| எம். எஸ். ராமசாமி | — | அருப்புக்கோட்டை |
| எஸ். அப்பாவு | — | ஈரோடு |
| தா. மா. திருநாவுக்கரசு | — | அண்ணாமலைநகர் |

### அமைப்புக் குழு

| | | |
|---|---|---|
| என். வி. நடராசன் | — | சென்னை |
| பழனியப்பன் | — | குறிஞ்சிப்பாடி |
| எம். நடேசன | — | திருப்பத்தூர் (வ. ஆ) |
| வெங்கடாசலம் | — | உடுமலை |
| எம். சின்னையா | — | செங்கற்பட்டு |
| எம். எஸ். ராமசாமி | — | அருப்புக்கோட்டை |

### அமைப்புத் திட்டக் குழு

| | | |
|---|---|---|
| என். வி. நடராசன | — | சென்னை |
| காஞ்சி. மணிமொழியார் | — | சென்னை |
| கே. கோவிந்தசாமி | — | சென்னை |

### நிதிக் குழு

நிதிக் குழுவின் செயலாளராகத் தோழர் காஞ்சி மணிமொழியார் அவர்கள் செயலாற்றுவார்கள்.

சி. என். அண்ணாத்துரை,
பொதுச்செயலாளர்
திராவிட முன்னேற்றக் கழகம்

---

### இஞ்சினியர் சங்கக் கட்டிடம் தமிழ் நாட்டில் கட்டப் படக்கூடாதா?

இஞ்சினியர்கள சங்கக் கட்டிடம் ஒன்றைக் கல்கத்தாவில் கட்டுவதற்கு நிதி திரட்டுவதென்று திரு. பி. என். சவுத்திரி தலைமையில் கோவையில கூடிய இந்திய இஞ்சினியர் சங்க நிர்வாகக் கமிட்டி முடிவு செய்தது. ஆளுக்கு ரூ. 1000. வீதம நன்கொடை தரும் அபிமானிகளாக 5 தமிழர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இத்தகைய சங்கக் கட்டிடம், ஆராய்ச்சி நிலையம் முதலியவற்றைத் தமிழ் நாட்டில் ஏதாவது ஓர் ஊரில் ஏற்படுத்தினால் என்ன? சென்னையில் இப்படிப்பட்ட ஒரு கட்டிடம் ஏற்பட வேண்டுமெனத் தமிழ் நாட்டைச் சேர்ந்த அபிமானிகள் முயலக் கூடாதா? அரசாங்கம் வசூலிப்பது போதாதென இன்னுமா தமிழ் நாட்டின் பணத்தைத் தனிப்பட்ட வழிகளிலும் வட நாட்டிற்கு ஏற்றுமதி செய்து கொண்டிருத்தல் வேண்டும்!

---

### கோவை திருவள்ளுவர் கழகம்

கோவை, செப். 19—

இன்று மாலை 5 மணிக்கு தோழர் எம். சாமியப்பன் தலைமையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் நடந்தது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. தீர்மானங்கள்:—

"17—9—49-ல் திராவிடர் கழக மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் சென்னையில் கூடி, இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு, எதிரிகளுக்கு இடம் கொடுக்காது கண்ணியமான முறையில் "திராவிட முன்னேற்றக் கழகம்" என்று அமைத்து, அதற்கான அமைப்பு முறைகளையும் ஏற்படுத்தியதை இக் கமிட்டி முழுமனதுடன் ஆதரிப்பதுடன் அதற்கான எல்லா வகையான உதவிகளையும் செய்வது" என்பதாகும். என். கோவை திருவள்ளுவர் கழகத் தலைவர் தோழர் எம். சாமியப்பன் எழுதுகிறார்.

# காங்கிரசாட்சியில் கள்ளுக்கடை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோணல்புத்தி!! என்ன எண்ணுவர் பொதுமக்கள் இந்தபபோக்குக்கண்டு! என்ன வாவது இலட்சியம்!

ஒருபுறததிலேகாந்தியாரின் கல்லறை மீது கண்ணீரையும் மலரையும் கலந்து தூவிக் கொண்டே, மறுபுறத்தில் சீமைச்சரக்கும் நாட்டுச்சரக்கும் தருகிற போக்கு, நேர்மையுடையது தானு என்று கேட்கிறோம்.

இந்த மதியற்ற திட்டத்தை மத்திய மாகாண சர்க்கார், யோடோமால் என்ற மாவட்டத்திலே இவ்வாண்டு துவக்கி இருக்கிறதாக 'இந்து'வில் சேதி வந்திருக்கிறது.

இது வெற்றித் தருவதைக் கண்ட பிறகு, இதே திட்டம் வேறு இடங்களுக்கும் புகுத்தப் படுமாம்.

இதற்குக் காரணம் கூறும் போது, நமக்குப் பழய நாட்களில் வெள்ளை அதிகாரிகள் பேசின வாதங்களே, நினைவிற்கு வருகின்றன.

ஒரே அடியாகக் குடி-ஒழிப்புச் செய்தால், திருட்டுச் சாராயம் காய்ச்சுவதும், கள்ளத்தனமாகக் குடிப்பதும், அதிகமாகிக் கொண்டே வருகிறது, எனவே, சட்டம் முழு வெற்றி தரவில்லை, என்று மத்திய மாகாணக் காங்கிரஸ் சர்க்கார், கூறுகிறது. அதற்காகக் குடிப்பதற்கு லைசென்சு கொடுக்கிறதாம்! எப்படி இருக்கிறது வேடிக்கை! சர்க்கார், ஏன் தன் திறமையைப் பயன் படுத்தி, திருட்டுக் குடியை அடக்கக் கூடாது. ஊருருக்கும் உள்ள 'வந்தே மாதரங்களைக் கொண்டு, ஏன் இந்தக் காரியத்தைச் சாதிக்கக் கூடாது? ஏன் மற்றக் கட்சியினாகளையும் சேர்த்து இந்தச் சிலாக்கியமான காரியத்தைச் செய்யக் கூடாது? கம்யூனிஸ்டுகளைத் தேடிததேடிப் பிடிததுக் கூண்டிலே தள்ள மட்டும், திறமையும் சுறு சுறுப்பும் இருக்கிறது - சாராயம் காய்ச்சுபவர்களைக் கண்டுபிடித்துத் தடுக்க, தண்டிக்க, அந்தத் திறமை ஏன்பயன்படக்கூடாது! வெட்கமின்றி, ரோஷமற்றுக் கூறுகிறது ஒரு சர்க்கார், திருட்டுக் குடியைத் தடுப்பதுசிரமமாகி விட்டது என்று. இது சரியா? இதற்காகவா, இந்தப் 'பிரதாப சுந்தரர்கள்' ஆட்சிப் பீடம் ஏறினர், என்று கேட்கிறோம்.

சர்க்காருக்கு, வருமானம் குறைந்து விடுகிறதாம்-குடியை அடியோடு ஒழித்து விட்டால்! இப்படிக் காங்கிரசாரா பேசுவது!! கண்ணியமான பேச்சா இது? இது போல முன்பு வெள்ளை அதிகாரிகள் வாதிட்ட போது, எவ்வளவு வன்மையாகக் கண்டித்திருக்கிறோம் என்பதையாவது இவர்கள் இது சமயம் எண்ணிப் பார்க்க வேண்டாமா? குடியை ஊட்டித்தானு ஒரு சர்க்கார் தன் பிழைப்பை நடத்த வேண்டும்! யோக்கியப் பொறுப்புடையது தானு இந்தத்திட்டம். அல்ல! அல்ல! அக்ரமம், அக்ரமம்! என்றே அறிவுடையோர் அனைவரும் கூறுவா. எனினும், மத்ய மாகாண சர்க்கார், மிதக் குடித் திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரத் துணிந்து விட்டது. மக்கள் கோபித்தாலும், அறிவாளர்கள் கண்டித்தாலும்,

மாற்றுக் கட்சி ஒன்று முறையாக, கட்டுப்பாடாக இல்லை ஆகையால், ஓட்டு வேட்டையில் பல்ன் எப்போதும் போலக் கிடைத்துவிடும் என்ற அசட்டுத் தைரியத்திலே, ம. மா. சர்க்கார், இவ்விதம் செய்கிறது.

இதைக் கண்டு, மற்ற இடத்துக் காங்கிரஸ் சர்க்காரும், 'கடை வைக்க' ஆரம்பித்துவிட முன் வந்தால் என்ன செய்வது? ம. மா. சர்க்காரின் இந்தச் செயலைத் தடுக்கவும் கண்டிக்கவும் மக்கள் முன்வராவிட்டால், 'கடைகளை' அங்குத் திறந்துவிட அனுமதித்துவிட்டால், பணமுடை என்ற காரணம் காட்டி, திருட்டுச் சாராய விற்பனை அதிகரித்து விட்டது என்ற சாக்குக் கூறிக் கொண்டு, நமது மாகாணத்திலேயும், 'கடைகளை'த் திறந்துவிட 'கனம்கள்' துணிந்துவிடக் கூடுமே! நிலைமை நகைப்புக்கிடமானதாகுமே! உலகம் கேலி பேசுமே; என்பதனுல்தான், இப்போது, ம. மா. சர்க்கார் மேற்கொண்டுள்ள, 'குடி ஆதரிப்பு'த் திட்டத்தைக் கண்டனத்தால் தகர்க்க மக்கள், பொறுப்புள்ள அறிஞர்கள் முன் வர வேண்டுமென்கிறோம்.

எங்கோ ஓரிடத்தில், வேறோர் மாகாணத்திலே நடைபெறுவது தானே, நமக்கென்ன, என்று இருப்பது பொருத்தமற்ற போக்கு, ஆபத்தான மனப்பான்மை. மத்திய மாகாணத்திலேதான் இந்த மது தரும் முறை துவக்கமாகிறது என்ற போதிலும், அங்கே ஆட்சி புரிவது, காங்கிரஸ் என்பதை கவனத்தில் வைக்கவேண்டும்.

காங்கிரசாட்சியிலே, கள்ளுக் கடைகள் !

இதைவிடக் கேவலமான நிலைமை வேறென்ன வேண்டும்! இதை இன்று அனுமதித்தால், அடுத்த வருஷமோ, அதற்குப் பிறகோ, நமது மாகாண மந்திரிமார்கள், ஊருருக்குள் சென்று, மது விலக்குத் திட்டத்திலே ஒரு மாறுதல் செய்யவேண்டிய நிலைமை வந்துவிட்டது என்று முறையிட்டுக்கொண்டு, 'கடைகளை'த் திறக்கத் தொடங்கினுல், என்ன செய்வது!

செய்வார்களா அவ்விதம் ! சும்மாவிடுவார்களா, மக்கள் ! என்று சூரத்தனமாகப்பேசுவர், சிலர். மத்திய மாகாணத்திலே, 'கடைகளை'த் திறப்பார்கள் காங்கிரசாட்சியில் என்று யார் எண்ணியிருக்க முடியும்? அதோ, கூறுகிறார்களே கூச்சமின்றி! திட்டுகிறார்களே திட்டம், ஆளுக்கு ஒரு பாட்டில், என்று! அதுபோல, நாளைக்கு இங்கு நடைபெறுது என்று யார் கூறுவது! எப்படி நம்ப முடியும்? காங்கிரசின் மூலாதாரக் கொள்கையாகவும், காந்தியாரின் மூச்சாகவும் இருந்துவந்த மதுவிலக்குக்கு, ஒருஇடத்திலே மண்டையில் அடிவிழ அனுமதித்துவிட்டால், பிறகு, மற்ற இடங்களிலேயும், ஒரு நாளைக்கு அதே கதி தானே ஏற்படும்.

பொறுப்புள்ள காங்கிரஸ் வாதிகள், உடனடியாக இந்தப் போக்கைக் கண்டிக்க வேண்டும்; இல்லையேல், காந்தியாரின் கல்லறைமீதுசிந்தும் கண்ணீருக்குப் பொருள் இல்லை — பலன் இராது.

நமது மாகாணத்தி மந்திரி மார்கள், மத்ய மாகாணத்தில், காங்கிரஸ் மந்திரிகள் கடை திறப்பு விழா செய்துவிடுகிறார்களே, இனி என்ன என்று எண்ணி, இங்கு மது விலக்குத் திட்டத்தை மாற்றக் கூடாது என்று எச்சரிக்கிறோம்.

தடுமாற்றம் கூடாது - என்று எச்சரிக்கிறோம்.

குதிரைப்பந்தய ஒழிப்புக்குச் சட்டம் செய்தான பிறகு, நமது மாகாணக்காங்கிரஸ் ஆட்சியினர், இப்போது, தடுமாற்றமடைந்து, இந்தவருஷம்மட்டும் குதிரைப்பந்தயம் நடத்தலாமா, என்று யோசிக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறோம் - வேதனைப் படுகின்றனர் மக்கள். இது போல, மதுவிலக்கு விஷயத்திலும், தடுமாறி, மத்ய மாகாணக் காங்கிரஸ் சர்க்காரின் போக்கை உதாரணமாகக் கொண்டு, கள்ளுக்கடைகளைத் திறந்து விடுவார்களோ, என்ற அச்சம், நமக்கு ஏற்படுகிறது. இந்த விபரீத வழி செல்லக் கூடாது என்று எச்சரிக்கிறோம்

# அமெரிக்காவின் ஆட்சிக் குழுவினர்



அமெரிக்கக குடியரசாட்சியின முக்கிய ஆட்சிக் குழுவினர் தாம் இப்படத்தில் காணப் படுபவர்கள். இடது பக்கத்திலிருந்து மூன்ருவதாக உட்கார்ந்திருப்பவர்தான் குடியரசுத் தலைவர் டரூமென் ஆவார்.

## திராவிட முன்னேற்றக் கழகம்எழுகிணறுகிளை

சென்னை, செப். 22.

சென்னை எழுகிணறு திராவிடர் கழகத்தின் நிர்வாகக் கமிட்டி கூட்டம் 21—9—49 இரவு 8-மணிக்கு 179, போர்ச்சுகிஸ் சர்ச் தெரு, இல்லத்தில் தோழர் எம். வாதன் தலைமையில் நடைபெற்றது.

சென்னை எழுகிணறு திராவிடர் கழகம் என்றிருந்ததை மாற்றி, "திராவிட முன்னேற்றக் கழகம் - எழுகிணறு கிளை" என்று அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

பழைய நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு, புதிய நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப் பட்டது.

தோழர்கள் சே. தேவசகாயம் செயலாளராகவும், டி. ஆர். முத்துக்கிருட்டினன் பொருள் உறுப்பினராகவும், எம். வாதன் விளம்பர உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனா.

தோழியர் சத்தியவாணி முத்து, தோழர்கள் வி. முனுசாமி, எம். சி. நரசிம்மன், பி. கே. சுந்தரம், பி. பார்த்தசாரதி, எஸ். கோதண்டபாணி, எஸ் வைத்தியலிங்கம் ஆகியோர் நிர்வாக உறுப்பினாகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

## காலங் கடந்தது!

இந்தியாவின் எதிர் காலத்தை உருவாக்குவதற்குத் தாங்கள் தகுதியானவர்களென மாணவர்கள் கருதுவார்களானல் பள்ளிகளிலும், காலேஜுகளிலும் அவர்களுக்கு இடமில்லை. வெளியேதான் அவர்கள் இருக்கவேணடும்.

—ஜவஹர்.

## திராவிடர் முன்னேற்றக் கழக கொடியேற்று விழா

கூடலூர், செப். 20—

இன்று காலை 10 மணிக்கு இம்பீரியல் ரோடில் கி. கோவிந்தராசன் கடை அருகில் இவ்வூர் பஞ்சாயத்து கோர்ட்டு தலைவரும், முன்னுள் நகராண்மை மன்ற உறுப்பினருமாகிய கு தண்டபாணி அவர்களால் "திராவிடர் முன்னேற்றக் கழகம வளர்க" என்ற பேரொலியுடன் 18—9—49 பொதுக் கூட்டத்தில் பறந்த, பாதி கருப்பும், பாதி சிவப்பும் உள்ள கொடியை ஏற்றினுர். பஞ்சாயத்து கோர்ட்டு உறுப்பினர் ப. அருணுசலம் அவர்களுடையவும், பெ அ. இளங்கோ அவாகளுடையவும் முயறசி பாராட்டத்தக்கது.

(ந. நி.)

## கொடி ஏற்று விழா

பொள்ளாச்சி, செப். 22—

20-9-49 செவ்வாய் மாலை 7-மணிக்கு பொள்ளாச்சி நகர திராவிடர் வாலிபர் கழகக் கட்டிடத்தில் கழகத் தலைவர் தோழர் அ. ச. பாலு அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொடியை ஏற்றி வைத்தார். 8-மணிக்கு திராவிட வாலிபர் கழகத்தின் நிர்வாகக் குழு உறுப்பினா தோழா கமால்பாட்சா அவர்களின் மளிகையில் தி. மு. கழகத்தின் கொடியை தோழர் பி. என். இராமானுசம் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது. இவ்விழாவில் தோழர்கள் யாகூப், தூயமணி, ஆறுமுகம், பழனிசாமி, வேலுசாமி, வீராசாமி, பொன்னுச்சாமி, நடராசன், பழனிசாமி, சுப்பையன் ஆகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டனா. தோழர் கமால் பாட்சா அவர்கள் விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு தேநீர் விருந்து நடத்தினுர். -(ந-நி)

## திராவிட முன்னேற்றக் கழகக் கொடியேற்றம்

சென்னை, செப். 20—

இதுவரை திராவிடர் கழகக் கொடி பறந்து கொண்டிருந்த இடத்தில் (டவர் அவுஸ் சுழல் மெத்தை அருகில்) 19—9—49. காலை 9 மணிக்கு வடசென்னைத் தோழர். S. P. T. திராவிடமணி அவர்களால் "திராவிட முன்னேற்றக் கழகக்" கொடி உயர்ந்த கம்பத்தில் உயர்த்தப்பட்டு வானளாவப் பறந்து கொண்டிருக்கிறது.

வெளிவந்துவிட்டது

திருக்குறள்—குழந்தை யுரை

"இராவணகாவியம்" ஆசிரியரின் ஆராய்ச்சிமிக்க விரிவுரை! எளிய நடை!

540 பக்கம். அழகிய அட்டை விலை 4-0-0.

மொததமாக வாஙகுவோாக்குத் தக்க கழிவுண்டு.
முன்பணம் அனுப்புவோர்க்கு அஞ்சல் கூலி இனும்.

தேவைக்கு:- சிவலிங்கவிலாசம் புத்தகசாலை, ஈரோடு.

குறிப்பு:— 'மாலை மணி' ஏஜண்டுகளிடமும கிடைக்கும்.

திராவிட முன்னேற்றக் கழக பிரசார ஏடு

"எரிமலை" மாதமிருமுறை

10, 15 ஆகிய ஆங்கிலத் தேதிகளில் வெளிவருவது

விலை 0-1-6. ஆண்டுக் கட்டணம் ரூ. 2-4-0

ஆசிரியர் : ஏ. கே. வேலன்.

விபரங்கட்கு : ஏஜண்டுகள் தேவை.

நிர்வாகி, 'எரிமலை' அலுவலகம், கரந்தை, தஞ்சை.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.